# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2023 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்

---

[*2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2023, செத்தெம்பர் மாதம் 22 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *2023 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்*

*[2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ. - ஓ. (கூட்). 4/2019*

## *2000 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயர்*

***1***. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2000 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்*

***2***. (இதனகத்துப்பின்னர், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2000 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, "இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் விரிவுப் பெயரானது, "இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவகம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கை சேவை வசதிகள் மற்றும் போக்குவரத்து பட்டய நிறுவகம்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத் துக்கும் வேறு எழுத்திலான சட்டத்துக்குமான பொதுவான திருத்தம்*

***3***. (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திலும், "இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக முதன்மைச் சட்டவாக்கத்திலும் அத்தயை வேறு எழுத்திலான சட்டத்திலும், "இலங்கை சேவை வசதிகள் மற்றும் போக்குவரத்து பட்டய நிறுவகம்" என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தல், அறிவிப்பு, ஒப்பந்தம், தொடர்பாடல் அல்லது வேறு ஆவணத்திலுள்ள, "இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவகம்" என்பதற்கான ஒவ்வொரு குறிப்பீடும், "இலங்கை சேவை வசதிகள் மற்றும் போக்குவரத்து பட்டய நிறுவகம்" என்பதற்கான குறிப்பீ டொன்றென்றவாறாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

*ஐயத்தைத் தவிர்த்தல்*

**4**. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, "இலங்கை சேவை வசதிகள் மற்றும் போக்குவரத்து பட்டய நிறுவகம்" என்பது, "இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவகம்" என்பதற்கான அடுத்துறுநராக இருப்பதாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*